# சென்னை மெட்ரோ ரயிலில் 5 நாள்களில் 5.17 லட்சம் பேர் பயணம்



சென்னை, ஜன.19: பொங்கல் பண்டிகையையொட்டி சென்னை மெட்ரோ ரயில்களில் பயணிகள் கூட்டம் அலைமோதியது. ஜனவரி 14-ஆம் தேதி முதல் 18-ஆம் தேதி வரை மொத்தம் 5 நாள்களில் 5 லட்சத்து 17 ஆயிரத்து 594 பேர் பயணம் செய்துள்ளனர்.

சென்னையில் இயக்கப்படும் மெட்ரோ ரயில்களில் பயணிகளை ஈர்க்கும் வகையில் பல்வேறு வசதிகளை மெட்ரோ ரயில் நிறுவனம் ஏற்படுத்தி கொடுத்து வருகிறது.

இதுதவிர, பயணிகளுக்கு புதிய சலுகைகளையும் அறிவித்துள்ளது. அந்த வகையில், ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாள்களில் 50 சதவீதம் கட்டண சலுகை அளிக்கப்படுகிறது. இது பயணிகள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இதற்கிடையே, பெங்கலையொட்டி, கடந்த 15, 16, 17 ஆகிய தேதிகளில் 50 சதவீதம் கட்டண சலுகையை அறிவித்தது.

மேலும், பொங்கல் பண்டிகை கொண்டாடுவதற்காக சென்னையில் இருந்து சொந்த ஊர்களுக்கு பொது மக்கள் கடந்த 14-ஆம்தேதி புறப்பட்டனர். இதற்காக, மெட்ரோ ரயில்களில் சென்ட்ரல், எழும்பூர் ஆகிய ரயில்நிலையத்துக்கும், கோயம்பேடு பேருந்து நிலையத்துக்கும் சென்று அங்கிருந்து முறையே விரைவு ரயில்கள், பேருந்துகள் மூலமாக ஊருக்கு சென்றனர். இதனால், பயணிகள் கூட்டம் மெட்ரோ ரயில்களில் அலைமோதியது. இதுபோல, காணும்பொங்கல் அன்று மக்கள் கடற்கரை உள்பட பல்வேறு இடங்களுக்கு சென்றனர்.

இந்நிலையில், மெட்ரோ ரயில்களில் ஜனவரி 14-ஆம் தேதி முதல் ஜனவரி 18-ஆம் தேதி வரை 5 நாள்களில் மொத்தம் 5 லட்சத்து 17 ஆயிரத்து 594 பேர் பயணம் செய்துள்ளனர். ஜனவரி 14-ஆம் தேதி 1,25, 424 பேரும், ஜனவரி 15-ஆம் தேதி 72, 845 பேரும், ஜனவரி 16-இல் 95,379 பேரும், ஜனவரி 17 -இல் 1,25, 333 பேரும், ஜனவரி 18-இல் 98,613 பேரும் பயணம் செய்துள்ளனர்.

இதுபோல, ஜனவரி 19-ஆம்தேதி அன்றும் ஒரு லட்சம் பேர் வரை மெட்ரோ ரயில்களில் பயணம் செய்து இருப்பார்கள் என்று மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.